# 23. மாட்டுக் குடிலில் பிறந்த யேசுநாதர்

அன்றிரவு சரியான குளிராக இருந்தது. பெத்லெகேமில் ஒரு மாட்டுக் குடிலில் ஒரு குழந்தை பிறந்தது. அவர்தான் குழந்தை யேசு.



ஆகாயத்தில் புதுமையானதொரு நட்சத்திரம் காணப்பட்டது. அது மிகவும் அழகாக இருந்தது. அந்த நட்சத்திரத்தின் மூலம் குழந்தை யேசுவின் பிறப்பை எல்லோரும் அறிந்து கொண்டார்கள்



யேசுவின் பிறப்பை முதன் முதலில் ஏழை இடையர்கள் அறிந்து கொண்டார்கள். அந்த இடையர்கள் குழந்தை யேசுவைப் பார்ப்பதற்கு அன்றிரவே சென்றார்கள்.

தூர தேசங்களிலிருந்தும் கல்விமான்கள் வந்தார்கள். அவர்கள் நட்சத்திரத்தைக் கண்டு வந்தார்கள். அவர்களை நாம் அறிஞர்கள் என்கிறோம். அவர்கள் யேசுவுக்குப் பரிசும் கொண்டு வந்தார்கள். அவர்கள் அதனை யேசுவுக்குக் காணிக்கையாக வைத்து வணங்கினார்கள்.

நாமும் குழந்தை யேசுவை வணங்குவோம்.